[கலைஞர் மு. கருணாநிதி] [2010 மே 10

மலேசியாவிலுள்ள இந்தியத் தூதுவரகம் திருமதி பார்வதியம்மாளோடு தொடர்பு கொண்டு ஆறு மாத காலத்திற்கு "விசா" வழங்கலாம் என்றும், சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குக்கு எந்தவிதமான குந்தகமும் இல்லாமல் இந்த ஆணை மத்திய அரசினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக இதுபோன்ற நிகழ்வுகளில் முடிவு எடுப்பதற்கு சில காலம் பிடிக்கும் என்றாலும், அந்த அம்மையாரின் உடல் நிலை கருதி, மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு மேல் மலேசியாவில் உள்ள அந்த அம்மையாரின் முடிவுக்கிணங்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த அவைக்கும், நாட்டிற்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

3. தகவல் கோரல்

(அ) சென்னை, தரமணியில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க நிலம் வழங்கியதில் முறைகேடு நடந்ததாகத் தெரிவித்தது

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன சொல்லுங்கள்?

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 28-4-2008 அன்று தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், (TIDCO) டாட்டா ரியால்ட்டி மற்றும் இன்ஃபிராஸ்டிரக்சர்ஸ் லிமிடெட், இந்தியன் ஹோட்டல்ஸ் கம்பெனி லிமிடெட் ஆகிய நிறுவனங்களுடன் சேர்ந்து ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டிருக்கிறது. அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சில அரசியல் தலையீடுகளும், கைமாறுகளும் நடந்ததாகத் தகவல் வந்ததையடுத்து தங்களிடம் இன்றைக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம், அதனை எப்போது கொடுத்திருக்கிறீர்கள்? (குறுக்கீடு) இன்று காலையில்தான் அதனைக் கொடுத்திருக்கிறீர்கள்.

அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்தவுடன் எடுக்க வேண்டுமென்றால் முடியாது. (குறுக்கீடுகள்) அதற்குரிய பதிலினைச் சொல்வதற்கு ஆளுங்கட்சித் தரப்பிலிருந்து அவர்கள் தயாராக இருக்கிறார்களா, என்ன என்பதைத் தெரிந்து கொண்டு, அதற்குரிய விவர அறிக்கையைப் பெற்ற பிறகுதான் இப்பொருள் குறித்து எடுக்க முடியும். (குறுக்கீடுகள்) அடுத்து வேறு என்ன? (குறுக்கீடுகள்) அதனை இன்றைக்குத்தான் கொடுத்திருக்கின்றீர்கள். (குறுக்கீடுகள்) சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்னவுடன் எடுக்க வேண்டும், நீங்கள் சொல்லாவிட்டால், எடுக்கக்கூடாது என்று அல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்திருக்கின்றீர்கள். அதனை இன்னும் படித்துக்கூட பார்க்கவில்லை.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்).

நான் அதை receive செய்து வைத்திருக்கிறேன், அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) நான் அதைச் சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி, அவர்களுடைய பதிலைப் பெற்றப் பிறகுதான் எடுக்கமுடியும். (குறுக்கீடுகள்) நீங்களெல்லாம் அமைச்சராக இருந்தவர்கள். உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) திடீரென்று ஒரு விஷயத்திலுள்ள விவரங்களைக் கேட்டால், அந்த விவரங்களைச் சேகரிப்பதற்காக அந்தத் துறைக்கு நாம் அவகாசம் கொடுக்க வேண்டாமா? (குறுக்கீடுகள்) நாளைக்கே எடுங்கள் என்று கேளுங்கள். (குறுக்கீடுகள்) அப்படியில்லாமல் உடனடியாக எடுக்க வேண்டுமென்றால், எப்படி எடுக்க முடியும்? (குறுக்கீடுகள்) நீங்கள் இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள், நான் அதைப் படித்துக்கூடப் பார்க்கவில்லை. நான் அதைப் படித்துப் பார்க்க வேண்டும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம், பேசுகிறாரா அல்லது மற்றவர்கள் பேசப் போகிறீர்களா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு, அதனை இன்றைக்கே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துவதோடு மட்டுமல்லாமல், எப்போது

[திரு. பரிதி இளம்வழுதி] [2010 மே 10

எடுத்துக்கொள்வீர்களென்றும், அதற்குரிய உத்தரவாதத்தைத் தர வேண்டுமென்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கேட்கிறார். (குறுக்கீடுகள்) கொஞ்சம் மனசாட்சியோடு பேசுங்கள். உங்களின் கடந்த ஆட்சிக் காலத்திலே, நாங்கள் கொடுத்த அனைத்து ஒத்திவைப்புத் தீர்மானங்களும் ஆய்விலே இருக்கின்றன, ஆய்விலே இருக்கின்றன என்று சொல்லி, கடைசிவரைக்கும் ஓய்விலே இருந்தனவே தவிர, எடுத்துக்கொள்ளப்படவேயில்லை என்பது உங்களுக்கே தெரியும். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள், அவர் அதை ஆய்வு செய்து எடுத்துக்கொள்கிறாரா அல்லது நிராகரிக்கிறாரா என்பதைப் பிறகு அவர் சொல்லட்டும். இன்றைக்கே சொல்ல வேண்டுமென்றால் எப்படி முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன். (குறுக்கீடுகள்) அதனை எப்போது எடுக்க வேண்டுமென்று எனக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) மற்றவர்களெல்லாம் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், என்னிடம் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள், நான் அதை இன்னும் படித்துக்கூடப் பார்க்கவில்லை. சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்ப வேண்டும். (குறுக்கீடுகள்) முதலில் மற்றவர்களெல்லாம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) உங்களிடம் நான் பேசுகிறேன், கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அதைக் கொடுத்திருக்கிறீர்கள். நான் அதைப் படித்துப் பார்த்து, சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி, அவர்கள் அதற்குப் பதிலளிக்கத் தயாராக இருக்கிறார்களா என்று கேட்டு, அதற்குப் பிறகு அதனை எடுத்துக்கொள்கிறேன். இன்றைக்கு எடுங்கள், நாளைக்கு எடுங்கள் என்று நீங்கள் எனக்கு உத்தரவுப் போடுகிறீர்களா? (குறுக்கீடுகள்) சரி, நீங்கள் பிறகு எனது அறைக்கு வாருங்கள், நான் அதனை எப்போது எடுக்கிறேன் என்பதை உங்களுக்குச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) பிறகு வாருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், பேசுங்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

2010 மே 10]

(ஆ) தனியார் பள்ளிகளில் வசூலிக்கும் கட்டணத்தை முறைப்படுத்துதல்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) தமிழகத்தில் இருக்கக்கூடிய மெட்ரிக் பள்ளிகளில், அவர்கள் இஷ்டத்திற்கு கல்விக் கட்டணத்தை உயர்த்தி, வசூல் செய்துவிட்டார்கள். அரசு இப்பொழுது கல்விக் கட்டணத்தை அறிவித்திருக்கிறது. ஏற்கெனவே கல்விக் கட்டணத்தைக் கூடுதலாக வசூல் செய்துவிட்டவர்களிடமிருந்து அதை எப்படித் திரும்பப் பெறுவது என்பது குறித்தும், அந்தக் கல்விக் கட்டணத்திற்குரியவர்கள் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டோமென்று அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருக்கக்கூடிய நிலை குறித்தும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். சமச்சீர் கல்வி, 1 ஆம் வகுப்பிலிருந்து 6 ஆம் வகுப்பைத் தவிர . . .

(அ) சென்னை, தரமணியில் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க நிலம் வழங்கியதில் முறைகேடு நடந்ததாகத் தெரிவித்தது–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்கிறார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சியிலே உள்ள சில உறுப்பினர்களும், தங்களிடத்திலே காலையிலே 9 மணி 10 நிமிட அளவிலே, ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு, அதனை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று-கிராமங்களிலே சொல்வார்களே அதைப்போல, "அழிச்சாட்டியம்" செய்து, இந்த அவையிலிருந்து வெளியேறியிருக்கிறார்கள். இது ஏதோ ஒரு பெரிய பூதாகரமான விஷயம் என்று மக்கள் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள்.

இதுவொன்றும் பூதாகரமான விஷயம் அல்ல. சொல்லப்போனால், பெங்களூருவிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அந்த வழக்கைப் போன்றதுகூட அல்ல இது என்பது எல்லோருக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

[கலைஞர் மு. கருணாநிதி] [2010 மே 10

பெங்களூருவிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அளவுக்கு மீறிய சொத்துச் சேர்த்த வழக்கு எத்தனை ஆண்டுக்காலம் நடைபெறுகிறது? ஏன் நடைபெறுகிறது என்ற கேள்விகளைப் பற்றியெல்லாம்கூட உறுப்பினர்கள் இங்கே வினா எழுப்பி, அதை இந்த அவையிலே கொண்டுவர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதையும் நீங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அவசரப்பட்டு, அதை அவைக்குக் கொண்டுவரவில்லை. ஆனால், இவர்கள் ஏதோ மாமல்லபுரம் சாலையில் ஒரு தொழிற்சாலை அமைப்பதற்காக நடைபெற்றிருக்கின்ற ஒப்பந்தம் குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு, அதை எடுத்துக்கொள்ளவில்லை என்பதைச் சாக்கிட்டு, வெளியிலே சென்றிட, வெளிநடப்புச் செய்து, பத்திரிகைகாரர்களிடத்திலே பூதாகரமாக எடுத்துச் சொல்லத் திட்டமிட்டு, இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். இந்த மாமன்றத்தினுடைய அலுவல்கள் 14, 15 ஆம் தேதியோடு முடிவுற்று, நாமெல்லாம் ஓர் இடைக்காலத்தைச் சந்திக்கக்கூடிய சூழ்நிலையில், பிரசாரம் செய்வதற்கு இந்த வெளிநடப்பும், இந்தக் குறுக்கீடும் பயன்படுமே தவிர, இதில் எந்தவிதமான சாரமும் இல்லை; சத்தும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-40

(ஆ) தனியார் பள்ளிகளில் வசூலிக்கும் கட்டணத்தை முறைப்படுத்துதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், நான் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரிடம் அறிந்துகொள்ள விரும்புவது, இப்பொழுது எந்தெந்தப் பள்ளிகளுக்கு எவ்வளவு கட்டணத்தை நீங்கள் நிர்ணயித்திருக்கிறீர்கள்? அதிலே A, B, C, D என்று ரகம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதேபோல் அதிகமாக வசூலித்த பள்ளிகள்மீது எப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படும்? சமச்சீர் கல்வியை இந்த அரசு இந்த ஆண்டு எந்தெந்த வகுப்புகளுக்கு எப்படி நிறைவேற்றப்போகிறது என்பதை இந்த அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.